<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.51/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.5<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : அப்துல்மாலிக் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : கமாலுதின் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.07.2023.

<u>( முதல் விசாரணை ):</u>

நான் கொல்லம்பட்டரை வசித்து வருகிறேன். தள்ளுவண்டி கடை வைத்துள்ளேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோனது எனது நண்பர் ஆவார். தேதி மாதம் ஞாபகம் இல்லை 2020ம் வருடம் கணியூரில் தமுமுக கட்சியின் கொடியேற்று விழாவிற்காக ஜிப்சி ஜீப்பில் நான் அப்சல், அப்பாஸ் ஓட்டிக்கொண்டும் மற்றும் 4 பேர் காலையில் உடுமலை யுனியன் ஆபிசில் கெடியேற்றிவிட்டு உடுமலை – பழனி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்தபோது எங்கள் ஜீப்பிற்கு முன்னால் ஒரு லாரி போய்க்கொண்டிருந்தது. அந்த லாரி காந்தி நகர் இரண்டாவது வீதி பக்கம் போனபோது தீடிரென பிரேக் போட்டுவிட்டார். மேற்படி எங்கள் ஜீப்பை ஓட்டிக்கொண்டிருந்த அப்பாஸ் முன்னால் சென்ற லாரி மீது மோதாமல் இருப்பதற்காக ஜீப்பை வலது புறம் திருப்பியபோது இடது புறம் டிரைவர் சீட்டு பக்கம் உட்கார்ந்து கொண்டிருந்த அப்சருக்கு ஜீப்சியின் கம்பி உடைந்து தலையில்பட்டு காயம் ஏற்பட்டது.

2. எனக்கு இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டு கையை தூக்க முடியாத அளவிற்கு கை முறிவு ஏற்பட்டது. என்னுடன் இருந்தவர்களின்

ஒருவருக்கு பல்லிலும் ஒருவருக்கு மூக்கிலும், ஒருவருக்கு மார்பிலும் அடிப்பட்டது. ஜீப்பை ஓட்டி சென்றவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. மேற்படி விபத்தில் காயம்பட்ட நபர்களை ஜீப்பை ஓட்டி சென்ற அப்பாஸ் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார். இரண்டு நபர்களை தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். நான் சிகிச்சையில் இருந்தேன் இந்த விபத்தில் அடிப்பட்ட அப்சர் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார். மேற்படி லாரியை ஓட்டி சென்ற டிரைவரை நான் பார்க்கவில்லை மயக்கமாகிவிட்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.51/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.6<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கார்த்தி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜேந்திரன் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.07.2023.

<u>. ( முதல் விசாரணை ):</u>

நான் உடுமலையில் வசித்து வருகிறேன். கட்டிட வேலை செய்து வருகிறேன். 29.08.2020 ம் தேதி மதியம் 1.10 மணிக்கு பழனி ரோட்டில் நடந்த விபத்து சம்பந்தமாக பார்க்கபோனபோது உடுமலை போலிசார் அங்கு வந்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள். நானும் சஞ்சையும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் **(பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கு விபத்தில் காயம்பட்ட நபர்கள் எனது நண்பர்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் வாகன நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். மக்கள் நடமாட்டமும் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். நான் போனபோதும் பொது மக்கள் இருந்தார்கள்

என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்தை போலிசாருக்கு அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் சென்ற இடத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் இருந்ததா என்றால் இல்லை. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும் போலிசார் எழுதி வைத்ததில் கையெழுத்து போட்டேன் என்றால் என் முன்னிலையில் தான் எழுதினார்கள் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன விவரம் எழுதி இருந்தது என்றால் ஜீப்பில் சென்று அடிப்பட்டதாக எழுதி இருந்தார்கள். விபத்து நடந்த இடத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் இருப்பதாக குறிப்பிட்டிருந்தால் தவறு என்றால் தவறுதான். என்னை போலிசார் சம்பவ இடத்தில் வைத்து தான் விசாரித்தார்கள் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு ஆகும்.

2. என்னுடன் கையெழுத்து செய்தவர் காந்தி சந்தில் இருப்பதாலும் நான் ராமசாமி நகரில் வசிப்பதாலும் சம்பவ இடத்திற்கு போகவேண்டிய அவசியம் இல்லை என்பதால் விபத்தில் அடிப்பட்டவர்கள் எனது நண்பர்கள் என்பதால் காவல் நிலையயத்தில் வைத்து சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.